700-ம் семисо́тый	6000-ம் шеститы́сячный
800-ம் восьмисо́тый	1 000000-ம் миллио́нный
900-ம் девятисо́тый	1 000 000 000-ம் миллиа́рдный முதலியன

கூட்டு எண்பெயர்களிலே கடைசியாக வரும் எண்பெயர் மட்டும் வரிசை எண்பெயராக இருக்கலாம். உதாரணம்: тысяча девятьсóт шестьдеся́т второ́й год «ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்திரண்டாம் ஆண்டு».

28. வரிசை எண்பெயர்ச்சொற்களுக்கு ஒருமை (ஆண்பால், பெண்பால், நடுப்பால்), பன்மை உருவங்கள் உண்டு.

வரிசை எண்பெயர்ச்சொற்கள்

	ஒருமை			பன்மை
	ஆண்பால்	பெண்பால்	நடுப்பால்	
1-ம்	пе́рвый	пе́рвая	пе́рвое	пе́рвые
2-ம்	второ́й	втора́я	второ́е	вторы́е
3-ம்	тре́тий	тре́тья	тре́тье	тре́тьи

வரிசை எண்பெயர்கள் எல்லாம் ஒத்திருக்கும் பெயருரிச் சொற்களைப் போல வேற்றுமைப்பட்டு வருகின்றன. அவை அடைமொழியாக வரும் பெயர்ச்சொற்களின் பால், எண், வேற்றுமை உருவங்களுக்குப் பொருத்தமான உருவங்களில் பயன்பட்டு வருகின்றன.

பிரதிப்பெயர்ச்சொல்

29. ருஷ்ய மொழியிலே இடப்பிரதிப்பெயர்கள் (personal pronouns), பிரதிபலனப் பிரதிப்பெயர்கள் (reflexive pronouns), உடைமைப் பிரதிப்பெயர்கள் (possessive pronouns), சுட்டுப்பிரதிப்பெயர்கள் (demonstrative pronouns), அடைமொழிப் பிரதிப்பெயர்கள் (adjective pronouns), வினா[-சம்பந்த]ப் பிரதிப்பெயர்கள் (interrogative-relative pronouns), எதிர்மறைப் பிரதிப்பெயர்கள் (negative pronouns), நிச்சயமற்ற பிரதிப்பெயர்கள் (indefinite pronouns) என வகைப் படுகின்றன.

30. இடப்பிரதிபெயர்கள் வேற்றுமைப்படும் மாதிரிகளை *1149-1150*-ம் பக்கங்களில் பார்க்க.

குறிப்பு: அடைப்புக்குறியிட்ட உருவங்கள் முன்னிடைச் சொற்களுக்குப் பின்னே தான் பயன்படுகின்றன. முன்னிடை வேற்றுமையில் வரும் சொற்கள் எல்லாம் எப்பொழுதும் முன்னிடையுடன் பயன்படுவதினால் அவ்வேற்றுமையில் ஒரே ஒரு உருவம் உண்டு.

இடப்பிரதிப்பெயர்கள் வேற்றுமைப்படும் மாதிரிகள்

ஒருமை

வேற்றுமை	தன்மை		முன்னிலை	
எழு.	я	நான்	ты	நீ
உரி.	меня́	எனது	тебя́	உனது
சம்.	мне	எனக்கு	тебе́	உனக்கு
செய.	меня́	என்னை	тебя́	உன்னை
க.	мно́й, мно́ю	என்னால்	тобо́й, тобо́ю	உன்னால்
முன்.	(обо) мне	என்னை[க் குறித்து]	(о) тебе́	உன்னை[க் குறித்து]

படர்க்கை

வேற்றுமை	ஆண்பால்		பெண்பால்		நடுப்பால்	
எழு.	он	அவன்	она́	அவள்	оно́	அது
உரி.	его́ (него́)	அவனது	её (неё)	அவளது	его́ (него́)	அதன்
சம்.	ему́ (нему́)	அவனுக்கு	ей (ней)	அவளுக்கு	ему́ (нему́)	அதற்கு
செய.	его́ (него́)	அவனை	её (неё)	அவளை	его́ (него́)	அதை
க.	им (ним)	அவனால்	ей (ней), éю (нéю)	அவளால்	им (ним)	அதனால்
முன்.	(о) нём	அதை[க் குறித்து]	(о) ней	அவளை[க் குறித்து]	(о) нём	அதை[க் குறித்து]

வேற்றுமை	தன்மை		முன்னிலை		படர்க்கை	
எழு.	мы	நாம், நாங்கள்	вы	நீங்கள்	они́	அவர்கள், அவை
உரி.	нас	நமது, எங்கள்	вас	உங்களது	их (них)	அவர்களது, அவற்றின்
சம்.	нам	நமக்கு, எங்களுக்கு	вам	உங்களுக்கு	им (ним)	அவர்களுக்கு, அவற்றிற்கு
செய.	нас	நம்மை, எங்களை	вас	உங்களை	их (них)	அவர்களை, அவற்றை
க.	на́ми	நம்மால், எங்களால்	ва́ми	உங்களால்	и́ми (ни́ми)	அவர்களினால், அவற்றினால்
முன்.	(о) нас	நம்மை[க் குறித்து], எங்களை[க் குறித்து]	(о) вас	உங்களை[க் குறித்து]	(о) них	அவர்களை[க் குறித்து], அவற்றை[க் குறித்து]

பிரதிபலனப் பிரதிப்பெயர்கள்

31. Себя́ «தன்» என்னும் பிரதிபலனப் பிரதிப்பெயருக்கு எழுவாய் உருவம் கிடையாது. மற்ற வேற்றுமை உருவங்கள் ты «நீ» என்னும் பிரதிப்பெயர் உருவங்களைப் போலும். அதாவது: உரி. себя́ «தன்», சம். себе́ «தனக்கு», செய. себя́ «தன்னை», க. собо́й «தன்னால்», முன். (о) себе́ «தன்னை[க் குறித்து]». Себя́ «தன்» என்பதற்கு ஒருமை-பன்மை வேறுபாடு இல்லை.

உடைமைப் பிரதிப்பெயர்கள்

32. உடைமைப் பிரதிப்பெயர்களாகிய мой «என்», твой «உன்», наш «நம், எங்கள்», ваш «உங்கள்», свой «தன்» என்பவை தாம் தழுவும் பெயர்ச்சொற்களின் பால், எண், வேற்றுமை உருவங்களை ஒட்டி ஆண்பால், பெண்பால், நடுப்பால், பன்மை முதலிய உருவங்களைக் கொள்ளலாம். உதாரணம்: мой дом «என் வீடு», твоя́ кни́га «உன் புத்தகம்», на́ше по́ле «நம் (எங்கள்) வயல்», ва́ши кни́ги «உங்கள் புத்தகங்கள்».

Его́ «அவனுடைய», её «அவளுடைய», их «அவர்களுடைய, அவைகளுடைய» என்பவற்றிற்கு ஒருமை-பன்மை வேறுபாடும் பால் வேறுபாடும் இல்லை. உதாரணம்: его́ дом «அவனுடைய வீடு», его́ кни́га «அவனுடைய புத்தகம்», его́ кни́ги «அவனுடைய புத்தகங்கள்».

33. உடைமைப் பிரதிப்பெயர்கள் வேற்றுமைப்படும் மாதிரிகளை *1152*-ம் பக்கத்தில் பார்க்க.

Твой «உன்» என்பதும் свой «தன்» என்பதும் мой «என்» என்பதைப் போல வேற்றுமைப்பட்டு வருகின்றன. Ваш «உங்கள்» என்பது наш «நம், எங்கள்» என்பதைப் போல வேற்றுமைப்பட்டு வருகிறது. Его́ «அவனுடைய», «அதனுடைய», её «அவளுடைய», их «அவர்களுடைய», «அவைகளுடைய» என்னும் பிரதிப்பெயர்கள் எவ்விதமும் மாறுவதில்லை (*1152*-ம் பக்கத்தை பார்க்க).

சுட்டுப் பிரதிப்பெயர்கள்

34. சுட்டுப் பிரதிப்பெயர்களாகிய тот «அந்த», э́тот «இந்த» என்பவை பின்வரும் பெயர்ச்சொற்களின் எண்-பால் உருவங்களை ஒட்டி ஆண்பால் பெண்பால் நடுப்பால் பன்மை ஆகிய உருவங்களில் பயன்பட்டு வருகின்றன. உதாரணம்: э́тот дом «இந்த வீடு», тот дом «அந்த வீடு», э́та кни́га «இந்தப் புத்தகம்», та кни́га «அந்தப் புத்தகம்», э́то по́ле «இந்த வயல்», то по́ле «அந்த வயல்», э́ти кни́ги «இந்தப் புத்தகங்கள்», те кни́ги «அந்தப் புத்தகங்கள்».

Э́тот «இந்த» என்னும் பிரதிப்பெயர் тот «அந்த» என்பதைப் போல வேற்றுமைப்பட்டு வருகிறது (*1153*-ம் பக்கத்தை

உடைமைப் பிரதிப்பெயர்கள் வேற்றுமைப்படும் மாதிரிகள்

வேற்றுமை	ஒருமை			பன்மை
	ஆண்பால்	பெண்பால்	நடுப்பால்	
	«என்»	«என்»	«என்»	«என்»
எழு.	мой	моя́	моё	мои́
உரி.	моего́	мое́й	моего́	мои́х
சம்.	моему́	мое́й	моему́	мои́м
செய.	моего́, мой	мою́	моё	мои́х, мой
க.	мои́м	мое́й, мое́ю	мои́м	мои́ми
முன்.	(о) моём	(о) мое́й	(о) моём	(о) мои́х
	«நம்», «எங்கள்»	«நம்», «எங்கள்»	«நம்», «எங்கள்»	«நம்», «எங்கள்»
எழு.	наш	на́ша	на́ше	на́ши
உரி.	на́шего	на́шей	на́шего	на́ших
சம்.	на́шему	на́шей	на́шему	на́шим
செய.	на́шего, наш	на́шу	на́ше	на́ших, на́ши
க.	на́шим	на́шей	на́шим	на́шими
முன்.	(о) на́шем	(о) на́шей	(о) на́шем	(о) на́ших

சுட்டுப் பிரதிப்பெயர்கள் வேற்றுமைப்படும் மாதிரிகள்

வேற்றுமை	ஒருமை			பன்மை
	ஆண்பால்	பெண்பால்	நடுப்பால்	
	«அந்த»	«அந்த»	«அந்த»	«அந்த»
எழு.	тот	та	то	те
உரி.	того́	той	того́	тех
சம்.	тому́	той	тому́	тем
செய.	того́, тот	ту	то	тех, те
க.	тем	той	тем	те́ми
முன்.	(о) том	(о) той	(о) том	(о) тех

பார்க்க); ஆனால் ஆண்பால் ஒருமைக் கருவிவேற்றுமையிலும் ஆண்பால் பன்மைக் கருவிவேற்றுமையிலும் அது முறையே э́тим, э́тими என்று மாறி விடுகிறது.

Такóй (ஆண்.), такáя (பெண்.), такóе (நடு.), такúе (பன்.) «இத்தகைய» என்னும் சுட்டுப்பிரதிப்பெயர்கள் ஒத்திருக்கும் பெயருரிச்சொற்களைப் போல வேற்றுமைப்பட்டு வருகின்றன.

வினை[-சம்பந்த]ப் பிரதிப்பெயர்கள்

35. Кто «யார்» என்பது உயிரோடுள்ள பொருட்களைக் குறிக்கிறது; что «என்ன» என்பது உயிரற்ற பொருட்களைக் குறிக்கிறது. வாக்கியத்தில் кто என்பது எழுவாய் வேற்றுமையில் வரும் ஆனால் வினைமுற்று ஒருமை ஆண்பால் உருவத்தில் பயன்படுகிறது; что என்பது வரும் ஆனால் வினைமுற்று ஒருமை நடுப்பால் உருவத்தில் பயன்படுகிறது.

Кто «யார்», что «என்ன» என்பவை வேற்றுமைப்படுவது பின்வருமாறு:

எழு.	кто «யார்»	что «என்ன»
உரி.	кого́ «யாருடைய»	чего́ «என்னத்தின்»
சம்.	кому́ «யாருக்கு»	чему́ «என்னத்திற்கு»
செய.	кого́ «யாரை»	что «என்னத்தை»
க.	кем «யாரால்»	чем «என்னத்தினால்»
முன்.	(о) ком «யாரை[க் குறித்து]»	(о) чём «என்னத்தை[க் குறித்து]»

36. வினை[-சம்பந்த]ப் பிரதிப்பெயர்களாகிய какóй «எம்மாதிரியான», котóрый «எந்த», чей «யாருடைய» என்பவற்றிற்கு ஆண்பால், பெண்பால், நடுப்பால், பன்மை ஆகிய உருவங்கள் இருக்கின்றன:

ஒருமை			பன்மை
ஆண்பால்	பெண்பால்	நடுப்பால்	
какóй «எம்மாதிரியான»	какáя	какóе	какúе
котóрый «எந்த»	котóрая	котóрое	котóрые
чей «யாருடைய»	чья	чьё	чьи

இந்தப் பிரதிப்பெயர்கள் எல்லாம் ஒத்திருக்கும் பெயருரிச்சொற்களைப் போல வேற்றுமைப்பட்டு வருகின்றன.

அடைமொழிப் பிரதிப்பெயர்கள்

37. அடைமொழிப் பிரதிப்பெயராகிய сам (பெண். самá, நடு. самó, பன். сáми) «தான்» என்பது э́тот «இந்த» என்னும் பிரதிப்பெயரைப் போல வேற்றுமைப்பட்டு வருகிறது. ஆனால் அதன் வேற்றுமையுருபுகள் எல்லாம் அழுத்தப்படுவனவாகும். உதாரணம்: எழு. сам «தான்», உரி. самогó «தன்», சம். самомý «தனக்கு» முதலியன.

அடைமொழிப் பிரதிப்பெயர்களாகிய сáмый «மிகவும் அதிகமான», вся́кий «ஏதாவது ஒன்று», ка́ждый «ஒவ்வொன்றும்» என்பவை பெயருரிச்சொற்களைப் போல வேற்றுமைப்பட்டு வருகின்றன.

அடைமொழிப் பிரதிப்பெயர்கள் எல்லாம் எந்தப் பெயர்ச் சொல்லுக்கு அடைமொழியாக நிற்கின்றனவோ அந்தப் பெயர்ச்சொல்லின் பால் எண் வேற்றுமை உருவங்களுக்குப் பொருத்தமான உருவங்களில் அமைய வேண்டும்.

38. Весь «எல்லாம்» என்னும் பிரதிப்பெயர் வேற்றுமைப் படுவது பின்வருமாறு:

வேற்றுமை	ஒருமை			பன்மை
	ஆண்பால்	பெண்பால்	நடுப்பால்	
எழு.	весь	вся	всё	все
உரி.	всегó	всей	всегó	всех
சம்.	всемý	всей	всемý	всем
செய.	всегó, весь	всю	всё	всех, все
க.	всем	всей, всéю	всем	всéми
முன்.	(о) всём	(о) всей	(о) всём	(о) всех

எதிர்மறைப் பிரதிப்பெயர்கள்

39. எதிர்மறைப் பிரதிப்பெயர்கள் எல்லாம் வினைப் பிரதிப்பெயர்களுக்கு எதிர்மறை ни- என்பதைச் சேர்த்துவிடுவதினால் அமைக்கப்படுவன. உதாரணம்: кто «யார்» — никтó «யாரும் இல்லை», что «யாது» — ничтó «யாதும் இல்லை», какóй «எம்மாதிரியான» — никакóй «எம்மாதிரியும் அல்லாத», чей «யாருடைய» — ничéй «யாருக்கும் உரியதல்லாத».

எதிர்மறைப் பிரதிப்பெயர்கள் எல்லாம் ஒத்திருக்கும் வினைப் பிரதிப்பெயர்களைப் போல வேற்றுமைப்பட்டு வருகின்

றன. ஆனால் அவை முன்னிடைச்சொற்களுடன் பயன்படும் சந்தர்ப்பங்களில் எதிர்மறை ни பிரிந்துபோய் அந்த முன்னிடைச்சொற்களுக்கு முன்னே நிற்கிறது. உதாரணம்: никто́ «யாரும் இல்லை», никого́ «யாரையும் இல்லை», ни у кого́ «யாரிடமும் இல்லை»; ничто́ «யாதும் இல்லை», ни для чего́ «யாதுக்காகவும் இல்லை».

நிச்சயமற்ற பிரதிப்பெயர்கள்

40. நிச்சயமற்ற பிரதிப்பெயராகிய не́кто «யாரோ ஒருவன்» என்பது எழுவாய் வேற்றுமையிலே மட்டும்தான் பயன்பட்டு வருகிறது. Не́что «ஏதோ ஒன்று» என்பது எழுவாய்வேற்றுமையிலும் செயப் படுபொருள்வேற்றுமையிலும் மட்டும் தான் பயன்பட்டு வருகிறது.

Не́который «ஏதோ ஒரு» என்பது வினைப் பிரதிப்பெயராகிய кото́рый «எந்த» என்பதைப் போல வேற்றுமைப்பட்டு வருகிறது. ஆனால் எல்லா வேற்றுமைகளிலும் சொல்லின் முதல் அசை не- அழுத்திச்சொல்லப்படுவதாகும். உதாரணம்: எழு. не́который, உரி. не́которого, சம். не́которому முதலியன.

-то, -либо, -нибудь, кое- என்னும் இடைச்சொற்களைக் கொண்ட எதிர்மறைப் பிரதிப்பெயர்கள் எல்லாம் ஒத்திருக்கும் வினைப் பிரதிப்பெயர்களைப் போல வேற்றுமைப்பட்டு வருகின்றன. உதாரணம்: кто́-то «யாரோ ஒருவர்» — кого́-то «யாரோ ஒருவரை»; что́-либо «ஏதாவது ஒன்று» — чему́-либо «ஏதாவது ஒன்றுக்கு»; како́й-нибудь «ஏதோ (ஒன்று)» — како́го-нибудь «ஏதோ (ஒன்றை)»; кое-кто́ «யாரோ ஒருவர்» — кое-ке́м «யாரோ ஒருவரால்».

வினைச்சொல்

41. ருஷ்ய மொழியிலே வினைச்சொற்களின் அடிப்படையான உருவமே நிகழ்கால வினையெச்ச உருவமாம். அது **-ть, -ти, -чь** என்னும் விகுதிகளில் ஒன்றைக் கொண்டு உருவாகி விடுகிறது. உதாரணம்: рабо́тать «வேலை செய்ய», говори́ть «பேச», нести́ «கொண்டுவர», идти́ «நடக்க», стере́чь «காக்க», лечь «படுத்துக் கொள்ள». சாதாரணமாக, -ть என்னும் விகுதியானது உயிரெழுத்துக்குப் பின்னே வருகிறது. -ти என்பது மெய்யெழுத்துக்குப் பின் வருகிறது. உயிரெழுத்துக்குப் பின்னே காணப்படும் -чь அதிகமாகப் பயன்படுவதில்லை.

42. ருஷ்ய மொழியிலே முற்றுப்பெறுத வினைச்சொல் (imperfect aspect) என்றும் முற்றுப்பெற்ற வினைச்சொல் (perfect aspect) என்றும் வழங்கும் முக்கியமான வேறுபாடு ஒன்று குறிப்

பிடத் தக்கது. முற்றுப்பெறுத வினைச்சொற்கள் எல்லாம் முடிந்து போகாத வினையையோ, நீடித்துக்கொண்டுவரும் வினையையோ, பன்முறை திரும்பத்திரும்ப நடைபெற்று வரும் வினையையோ குறிக்கின்றன. முற்றுப்பெற்ற வினைச் சொற்கள் எல்லாம் முடிவடைந்த வினையையோ, முடிந்து போகும் வினையையோ, அல்லது ஒரு முறை மட்டுமே நடை பெறக் கூடிய வினையையோ குறிக்கின்றன. உதாரணமாக, бросáть «எறிதல்» என்னும் முற்றுப்பெறுத வினைச்சொல் ஆரம்பித்திருக்கிற வினையையோ, ஆரம்பிக்கப் போகும் வினை யையோ, அல்லது நடைபெற்று வரும் வினையையோ குறிக் கிறது. ஆனல் அவ்வினை முடிந்துபோகவில்லையா அல்லது முடிந் துபோகுமா என்பதையும் அது பன்முறை செய்யப்படக் கூடிய வினையா என்பதையும் தெரிந்துகொள்வதற்கில்லை. அதற்கு மாறுக, முற்றுப்பெற்ற வினைச்சொல்லாகிய бро́сить «எறிந்து விடுதல்» என்பது ஒரே ஒரு முறை நடைபெற்று முடிந்துபோகும் அல்லது ஏற்கெனவே முடிந்துபோன வினை யைத்தான் குறிக்கிறது.

ருஷ்ய மொழியிலே முற்றுப்பெறுத வினைச்சொல்லை முற் றுப்பெற்ற வினைச்சொல் அடிக்கடி ஒத்திருக்கும். இரண்டிற்கும் உள்ள உருவ வேறுபாடுகள் பின்வருமாறு:

அ. **-а-ть** என்னும் விகுதியைக் கொண்ட முற்றுப்பெறுத வினைச்சொற்கள் பலவற்றை **-и-ть** என்னும் விகுதியைக் கொண்ட முற்றுப்பெற்ற வினைச்சொற்கள் ஒத்திருக்கும். உதா ரணம்:

முற்றுப்பெறுத	முற்றுப்பெற்ற
изучáть «ஆராய்ந்துகொண்டிருத் தல்»	изучи́ть «ஆராய்ந்துவிடு தல்»
получáть «வாங்கிக்கொண்டிருத்தல்»	получи́ть «வாங்கிவிடுதல்»
решáть «தீர்மானித்துக்கொண் டிருத்தல்»	реши́ть «தீர்மானித்துவிடு தல்»
кончáть «முடித்துக்கொண்டி ருத்தல்»	ко́нчить «முடித்துவிடுதல்»

ஆ. **-а-ть** என்னும் விகுதியைக் கொண்ட முற்றுப்பெறுத வினைச்சொற்கள் சிலவற்றை **-ну-ть** என்னும் விகுதியைக் கொண்ட முற்றுப்பெற்ற வினைச்சொற்கள் ஒத்திருக்கும். உதாரணம்:

исчезáть «மறைந்துகொண் டிருத்தல்»	исче́знуть «மறைந்துவிடு தல்»
мелькáть «மின்னிக்கொண் டிருத்தல்»	мелькну́ть «மின்னிவிடுதல்»

кричáть «கூவிக்கொண்டிருத்தல்» крúкнуть «கூவிவிடுதல்»

толкáть «தள்ளிக்கொண்டிருத்தல்» толкнýть «தள்ளிவிடுதல்»

இ. முற்றுப்பெறுத வினைச்சொற்கள் பலவற்றிற்கு முன்னல் **с-, на-, раз-, о-, по-, про-** முதலிய உபசர்க்கங்களைச் சேர்த்துவிடுவதினல் முற்றுப்பெற்ற வினைச்சொற்கள் அமைக்கப்படுகின்றன. உதாரணம்:

дéлать «செய்துகொண்டிருத்தல்» сдéлать «செய்துவிடுதல்»

писáть «எழுதிக்கொண்டிருத்தல்» написáть «எழுதிவிடுதல்»

будúть «எழுப்பிக்கொண்டிருத்தல்» разбудúть «எழுப்பிவிடுதல்»

крéпнуть «பலமடைந்துகொண்டிருத்தல்» окрéпнуть «பலமடைந்துவிடுதல்»

строúть «கட்டியமைத்துக்கொண்டிருத்தல்» пострóить «கட்டியமைத்துவிடுதல்»

читáть «படித்துக்கொண்டிருத்தல்» прочитáть «படித்துவிடுதல்»

ஈ. **-ть** என்னும் விகுதியைக்கொண்ட முற்றுப்பெற்ற வினைச்சொற்கள் சிலவற்றுடன் **-(и)вать, -ы(вать)** என்னும் விகுதிகளைச் சேர்த்துவிடுவதினல் முற்றுப்பெறுத வினைச்சொற்கள் அமைக்கப்படுகின்றன. உதாரணம்:

முற்றுப்பெற்ற	முற்றுப்பெறுத
дать «கொடுத்துவிடுதல்»	давáть «கொடுத்துக்கொண்டிருத்தல்»
показáть «காண்பித்துவிடுதல்»	покáзывать «காண்பித்துக்கொண்டிருத்தல்»
овладéть «அடைந்துவிடுதல்»	овладевáть «அடைந்துகொண்டிருத்தல்»
покрыть «மூடிவிடுதல்»	покрывáть «மூடிக்கொண்டிருத்தல்»

உ. மேற்குறிப்பிட்ட வினைச்சொற்கள் அன்றி, உபசர்க்கங்களைக் கொண்ட வினைச்சொற்களெல்லாம் சாதாரணமாக முற்றுப்பெற்ற வினைச்சொற்களே யாகும். உதாரணம்: писáть «எழுதிக் கொண்டிருத்தல்», ஆனல் дописáть «எழுதி முடித்தல்», переписáть «பார்த்து எழுதிவிடுதல்», записáть «எழுதிவைத்துவிடுதல்», описáть «விவரித்துவிடுதல்», прописáть «[மருந்து] குறித்து விடுதல்», предписáть «உத்தரவிடுதல்», надписáть «மேலே எழுதி விடுதல்» முதலியன.

ஊ. சில சந்தர்ப்பங்களில் முற்றுப்பெறுத வினைச் சொல்லுக்கும் முற்றுப்பெற்ற வினைச்சொல்லுக்கும் தனி வேறுபாடுகள் இருக்கின்றன. உதாரணம்: слу́шать «கேட்டுக் கொண்டிருத்தல்» — слы́шать «கேட்டுவிடுதல்».

எ. சில வினைச்சொற்களுக்கு ஒத்திருக்கும் இணை கிடையாது. உதாரணம்: очну́ться «மூர்ச்சை தெளிந்து விடுதல்» (ஒத்திருக்கும் முற்றுப்பெறுத வினைச்சொல் கிடையாது), безде́йствовать «சும்மாயிருத்தல்» (ஒத்திருக்கும் முற்றுப் பெற்ற வினைச்சொல் கிடையாது).

ஏ. சில சந்தர்ப்பங்களில் முற்றுப்பெறுத வினைச்சொற் களும் முற்றுப்பெற்ற வினைச்சொற்களும் அழுத்தப்படும் அசையினால் தான் வேறுபட்டு வருகின்றன. உதாரணம்: раз-реза́ть «வெட்டிக்கொண்டிருத்தல்» — разре́зать «வெட்டிவிடு தல்».

ஐ. சில சந்தர்ப்பங்களில் முற்றுப்பெறுத வினைச்சொற்க ளுக்கும் முற்றுப்பெற்ற வினைச்சொற்களுக்கும் உருவ வேறு பாடு எதுவும் இல்லை. உதாரணம்: иссле́довать «ஆராய்ந்து கொண்டிருத்தல்» அல்லது «ஆராய்ந்து விடுதல்».

43. தமிழ் மொழியைப் போல, ருஷ்ய மொழியிலுங்கூட வினைமுற்றும் வினையெச்சங்களும் பெயரெச்சங்களும் வேறுப ட்டு வருகின்றன. வினைமுற்றுக்களுக்குள்ளே குறிப்பு (indicative), ஏவல் (imperative), சம்பவிப்பு (subjunctive) இம்மூன்று நிலை கள் (moods) இருக்கின்றன.

குறிப்பு நிலை

குறிப்பு வினைமுற்றுக்களுக்கு நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம் என்று மூன்று காலரூபங்கள் இருக்கின்றன. தவிரவும், நிகழ்கால வினையெச்சம், இறந்தகால வினையெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், இறந்தகாலப் பெயரெச்சம் ஆகிய உருவங்கள் உள்ளன.

ருஷ்ய வினைச்சொற்களின் ரூபகரணம் இரு மாதிரியாக இருக்கிறது. நிகழ்கால வினையெச்ச உருவத்தில் **-и-ть** என்னும் இறுதியைக் கொண்டவற்றைத் தவிரவும் **-е-ть, -а-ть** என்னும் இறுதிகளைக் கொண்ட சில சொற்களைத் தவிரவும், எல்லா வி னைச்சொற்களும் முதலாவது ரூபகரணத்திற்கு உரியவை. **-и-ть** என்னும் இறுதியைக் கொண்ட வினைச்சொற்களும் **-е-ть, -а-ть** என்னும் இறுதிகளைக் கொண்ட வினைச்சொற்களில் சிலவும் (ஒருமைத் தன்மையில் **-е-, -а-** என்னும் உயிரெழுத்துக்களை

இழந்து வருபவை) இரண்டாவது ரூபகரணத்திற்கு உரியவை.

முற்றுப்பெறுத வினைச்சொற்களுக்கு நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம் என்று இம்மூன்று காலரூபங்கள் இருக்கின்றன. அவைகளில் எதிர்கால உருவங்கள் கூட்டுருவங்களாகும். அவை быть «இருத்தல்» என்பதின் எதிர்கால உருவங்களுக்குப் பின் நிகழ்கால வினையெச்சத்தைச் சேர்த்து அமைக்கப்பட்டு வருகின்றன.

முற்றுப்பெற்ற வினைச்சொற்களுக்கு இறந்தகாலம், எதிர்காலம் என்று இவ்விரண்டு காலரூபங்கள் மட்டும் தான் இருக்கின்றன. அதிலும், முற்றுப்பெற்ற வினைச்சொற்களின் எதிர்கால உருவங்கள் எல்லாம் முடிவடையா வினைச்சொற்களின் நிகழ்கால உருவங்களைப் போலும்.

44. Дéлать «செய்தல்», стрóить «கட்டியமைத்தல்», сдéлать «செய்துமுடித்தல்», пострóить «கட்டியமைத்து முடித்தல்» ஆகிய வினைச்சொற்கள் குறிப்பு ரூபகரண மாதிரிகள்:

முற்றுப்பெறுத வினைச்சொற்கள்

நிகழ்காலம்

1-ஆம் ரூபகரணம்

я дéлаю «நான் செய்துகொண்டிருக்கிறேன்»
ты дéлаешь «நீ செய்துகொண்டிருக்கிறாய்»
он (онá, онó) дéлает «அவன் (அவள், அது) செய்துகொண்டிருக்கிறான் (-கொண்டிருக்கிறாள், -கொண்டிருக்கிறது)»
мы дéлаем «நாம் செய்துகொண்டிருக்கிறோம்»
вы дéлаете «நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள்»
онú дéлают «அவர்கள் (அவை) செய்துகொண்டிருக்கிறார்கள் (-கொண்டிருக்கின்றன)»

2-ஆம் ரூபகரணம்

я стрóю «நான் கட்டியமைத்துக்கொண்டிருக்கிறேன்»
ты стрóишь «நீ கட்டியமைத்துக்கொண்டிருக்கிறாய்»
он (онá, онó) стрóит «அவன் (அவள், அது) கட்டியமைத்துக்கொண்டிருக்கிறான் (-கொண்டிருக்கிறாள், -கொண்டிருக்கிறது)»
мы стрóим «நாம் கட்டியமைத்துக்கொண்டிருக்கிறோம்»
вы стрóите «நீங்கள் கட்டியமைத்துக்கொண்டிருக்கிறீர்கள்»
онú стрóят «அவர்கள் (அவை) கட்டியமைத்துக்கொண்டிருக்கிறார்கள் (-கொண்டிருக்கின்றன)»

எதிர்காலம்

1-ஆம் ரூபகரணம்

я бу́ду де́лать «நான் செய்து கொண்டிருப்பேன்»
ты бу́дешь де́лать «நீ செய்து கொண்டிருப்பாய்»
он (она́, оно́) бу́дет де́лать «அவன் (அவள், அது) செய்துகொண்டிருப்பான் (-கொண்டிருப்பாள், -கொண்டிருக்கும்)»
мы бу́дем де́лать «நாம் செய்து கொண்டிருப்போம்»
вы бу́дете де́лать «நீங்கள் செய்துகொண்டிருப்பீர்கள்»
они́ бу́дут де́лать «அவர்கள் (அவை) செய்துகொண்டிருப்பார்கள் (-கொண்டிருக்கும்)»

2-ஆம் ரூபகரணம்

я бу́ду стро́ить «நான் கட்டியமைத்துக்கொண்டிருப்பேன்»
ты бу́дешь стро́ить «நீ கட்டியமைத்துக்கொண்டிருப்பாய்»
он (она́, оно́) бу́дет стро́ить «அவன் (அவள், அது) கட்டியமைத்துக்கொண்டிருப்பான் (-கொண்டிருப்பாள், -கொண்டிருக்கும்)»
мы бу́дем стро́ить «நாம் கட்டியமைத்துக்கொண்டிருப்போம்»
вы бу́дете стро́ить «நீங்கள் கட்டியமைத்துக்கொண்டிருப்பீர்கள்»
они́ бу́дут стро́ить «அவர்கள் (அவை) கட்டியமைத்துக்கொண்டிருப்பார்கள் (-கொண்டிருக்கும்)»

இறந்தகாலம்

1-ஆம் ரூபகரணம்

ஒருமை

ஆண்பால்

я (ты, он) де́лал «நான் (நீ, அவன்) செய்துகொண்டிருந்தேன் (-கொண்டிருந்தாய், -கொண்டிருந்தான்)»

பெண்பால்

я (ты, она́) де́лала «நான் (நீ, அவள்) செய்துகொண்டிருந்தேன் (-கொண்டிருந்தாய், -கொண்டிருந்தாள்)»

2-ஆம் ரூபகரணம்

ஒருமை

ஆண்பால்

я (ты, он) стро́ил «நான் (நீ, அவன்) கட்டியமைத்துக்கொண்டிருந்தேன் (-கொண்டிருந்தாய், -கொண்டிருந்தான்)»

பெண்பால்

я (ты, она́) стро́ила «நான் (நீ, அவள்) கட்டியமைத்துக்கொண்டிருந்தேன் (-கொண்டிருந்தாய், -கொண்டிருந்தாள்)»

நடுப்பால்

оно́ де́лало «அது செய்துகொண் оно́ стро́ило «அது கட்டிய
டிருந்தது» மைத்துக்கொண்டிருந்தது»

பன்மை

мы(вы, они́)де́лали «நாம்(நீங்கள், мы (вы, они́) стро́или «நாம்
அவர்கள், அவை) செய்து (நீங்கள், அவர்கள், அவை)
கொண்டிருந்தோம் (-கொ கட்டியமைத்துக்கொண்டிரு
ண்டிருந்தீர்கள், -கொண்ட ந்தோம் (-கொண்டிருந்தீர்
டிருந்தார்கள், -கொண்டி கள், -கொண்டிருந்தார்கள்,
ருந்தன)» -கொண்டிருந்தன)»

முற்றுப்பெற்ற வினைச்சொற்கள்

எதிர்காலம்

1-ஆம் ரூபகரணம்	2-ஆம் ரூபகரணம்
я сде́лаю «நான் செய்து முடிப் பேன்»	я постро́ю «நான் கட்டியமைத்து முடிப்பேன்»
ты сде́лаешь «நீ செய்து முடிப் பாய்»	ты постро́ишь «நீ கட்டியமைத்து முடிப்பாய்»
он(она́,оно́) сде́лает«அவன்(அவள், அது) செய்து முடிப் பான் (முடிப்பாள், முடிக் கும்)»	он (она́, оно́) постро́ит «அவன் (அவள், அது)கட்டியமைத்து முடிப்பான் (முடிப்பாள், முடிக்கும்)»
мы сде́лаем «நாம் செய்து முடிப் போம்»	мы постро́им «நாம் கட்டியமை த்து முடிப்போம்»
вы сде́лаете «நீங்கள் செய்து முடிப்பீர்கள்»	вы постро́ите «நீங்கள் கட்டிய மைத்து முடிப்பீர்கள்»
они́ сде́лают «அவர்கள் (அவை) செய்து முடிப்பார்கள் (முடிக்கும்)»	они́ постро́ят «அவர்கள் (அவை) கட்டியமைத்து முடிப்பார் கள் (முடிக்கும்)»

இறந்தகாலம்

1-ஆம் ரூபகரணம்	2-ஆம் ரூபகரணம்

ஒருமை

ஆண்பால்

я (ты, он) сде́лал «நான் (நீ, அவன்) செய்து முடித் தேன் (முடித்தாய், முடித் தான்)»	я (ты, он) постро́ил «நான் (நீ, அவன்) கட்டியமைத்து முடித்தேன் (முடித்தாய், முடித்தான்)»

பெண்பால்

я (ты, онá) сдéлала «*நான் (நீ, அவள்) செய்து முடித்தேன் (முடித்தாய், முடித்தாள்)*»

я (ты, онá) пострóила «*நான் (நீ, அவள்) கட்டியமைத்து முடித்தேன் (முடித்தாய், முடித்தாள்)*»

நடுப்பால்

онó сдéлало «*அது செய்து முடித்தது*»

онó пострóило «*அது கட்டியமைத்து முடித்தது*»

பன்மை

мы (вы, онú) сдéлали «*நாம் (நீங்கள், அவர்கள், அவை) செய்து முடித்தோம் (முடித்தீர்கள், முடித்தார்கள், முடித்தன)*»

мы (вы, онú) пострóили «*நாம் (நீங்கள், அவர்கள், அவை) கட்டியமைத்து முடித்தோம் (முடித்தீர்கள், முடித்தார்கள், முடித்தன)*»

45. *நிகழ்கால (எதிர்கால) உருவங்களை அமைப்பதில் சில வினைச்சொற்களின் பகுதிகளிலே* **к → ч, х → ш, ск → щ, т → ч, с → ш, з → ж, п → пл, ж → г** *முதலிய எழுத்து மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. உதாரணம்:* плáкать «*அழுதல்*» — плáчу «*நான் அழுகிறேன்*», пахáть «*உழுதல்*» — пáшешь «*நீ உழுகிறாய்*», искáть «*தேடுதல்*» — úщет «*அவன் தேடுகிறான்*», прятать «*ஒளித்தல்*» — прячем «*நாம் ஒளிக்கிறோம்*», писáть «*எழுதல்*» — пúшете «*நீங்கள் எழுதுகிறீர்கள்*», рéзать «*வெட்டுதல்*» — рéжут «*அவர்கள் வெட்டுகிறார்கள்*», сыпать «*கொட்டுதல்*» — сыплю «*நான் கொட்டுகிறேன்*», звать «*கூப்பிடுதல்*» — зовёшь «*நீ கூப்பிடுகிறாய்*», брать «*கொள்ளுதல்*» — берёт «*அவன் கொள்கிறான்*», пить «*குடித்தல்*» — пьём «*நாம் குடிக்கிறோம்*», мыть «*கழுவுதல்*» — мóете «*நீங்கள் கழுவுகிறீர்கள்*», петь «*பாடுதல்*» — поúт «*அவர்கள் பாடுகிறார்கள்*».

இறந்தகாலத்திலோ ஒருமை ஆண்பால் விகுதியாகிய **-л** *சில வினைச்சொற்களுக்கு வராது. சாதாரணமாக நிகழ்கால வினையெச்ச உருவத்தில்* **-сти, -чь, -нуть** *ஆகிய விகுதிகளைக் கொண்ட வற்றில் பல அப்படிப்பட்டவை. உதாரணம்:* нести́ «*சுமந்து போகுதல்*» — он нёс «*அவன் சுமந்துபோனான்*», ஆனால் онá неслá «*அவள் சுமந்து போனாள்*»; стерéчь «*காத்தல்*» — он стерёг «*அவன் காத்துக்கொண்டிருந்தான்*», ஆனால் онá стерегláа «*அவள் காத்துக்கொண்டிருந்தாள்*»; исчéзнуть «*மறைந்துபோகுதல்*» — он исчéз «*அவன் மறைந்துபோனான்*», ஆனால் онá исчéзла «*அவள் மறைந்துபோனாள்*».

ஏவல் நிலை

46. ருஷ்ய வினைச்சொற்களுக்கு ஒருமை, பன்மை என்று இவ்விரண்டு ஏவல் உருவங்கள் மட்டும் தான் இருந்து வருகின்றன.

ஏவல் ஒருமை அமைப்பதற்கு, நிகழ்கால (எதிர்கால) ஒருமைத் தன்மையில் வரும் **-у, -ю** ஆகிய விகுதிகளைப் போக்கி **-и, -й, -ь** ஆகிய விகுதிகளைச் சேர்த்து விட வேண்டும். எனில், மெய்யெழுத்துக்குப் பின் **-у, -ю** ஆகியவை அழுத்தப்படும். ஆனல் ஏவல் உருவத்தில் **-и** என்னும் விகுதி வரும். உதாரணம்: иду́ «நான் போகிறேன்» — идй «போ», говорю́ «நான் பேசுகிறேன்» — говори́ «பேசு». அழுத்தப்படாத **-у, -ю** என்பவற்றிற்கு முன்னே «மெய்யெழுத்து + **и**» ஆகியவை வரும் ஆனல் ஏவல் உருவம் மேற்கண்டவாறும் அமைக்கப்படும். உதாரணம்: достйгну «நான் அடைவேன்» — достйгни «அடைந்துசேர்», исчéзну «நான் மறைந்து போவேன்» — исчéзни «மறைந்து போ».

-ю ஆகிய விகுதி உயிரெழுத்துக்குப் பின் வந்தால் ஏவல் உருவத்தில் **-й** ஆகிய விகுதி சேர்க்கப்படும். உதாரணம்: работаю́ «நான் வேலை செய்கிறேன்» — работа́й «நீ வேலை செய்», строю́ «நான் கட்டியமைக்கிறேன்» — строй «நீ கட்டியமை».

நிகழ்கால வினையெச்ச உருவத்தில் **-ить** என்பதைக் கொண்ட ஓரசை வினைச்சொற்களின் ஏவலுங்கூட இவ்வாறுக அமைக்கப்பட்டு வருகிறது. உதாரணம்: пить «குடித்தல்» — пью «நான் குடிக்கிறேன்» — пей «நீ குடி», бить «அடித்தல்» — бью «நான் அடிக்கிறேன்» — бей «நீ அடி», шить «தைத்தல்» — шью «நான் தைக்கிறேன்» — шей «நீ தை».

ஒருமைத் தன்மை விகுதிகளாகிய **-у, -ю** என்பவை மெய்யெழுத்துக்குப் பின் வந்து அழுத்தப்படாவிட்டால் ஏவல் உருவத்தில் **-ь** என்னும் விகுதி வந்துவிடும். உதாரணம்: встáну «நான் எழுந்திருந்து விடுவேன்» — встань «நீ எழுந்திரு», приготóвлю «நான் தயாரித்துவிடுவேன்» — приготóвь «நீ தயாரித்து விடு».

பன்மை ஏவல் அமைப்பதற்கு ஒருமை ஏவல் உருவத்துடன் **-те** என்னும் விகுதியைச் சேர்த்துவிட வேண்டும். உதாரணம்: идй «நீ போ» — идйте «நீங்கள் போங்கள்», исчéзни «நீ மறைந்து போ» — исчéзните «நீங்கள் மறைந்து போங்கள்», бей «நீ அடி» — бéйте «நீங்கள் அடியுங்கள்», встань «நீ எழுந்திரு» — встáньте «நீங்கள் எழுந்திருங்கள்».

சம்பவிப்பு நிலை

47. சம்பவிப்பு நிலை (subjunctive mood) வினை உருவங்கள் எல்லாம் குறிப்பு இறந்தகாலத்து உருவங்களுடன் бы என்ற இடைச்சொல்லைச் சேர்த்து அமைக்கப்பட்டு வருகின்றன. உதாரணம்:

ஒருமை

ஆண்பால்

я (ты, он) сде́лал бы — «நான் (நீ, அவன்) செய்திருப்பேன் (-இருப்பாய், -இருப்பான்)»

பெண்பால்

я (ты, она́) сде́лала бы — «நான் (நீ, அவள்) செய்திருப்பேன் (-இருப்பாய், -இருப்பாள்)»

நடுப்பால்

оно́ сде́лало бы — «அது செய்திருக்கும்»

பன்மை

мы (вы, они́) сде́лали бы — «நாம் (நீங்கள், அவர்கள், அவை) செய்திருப்போம் (-இருப்பீர்கள், -இருப்பார்கள், -இருக்கும்)»

சம்பவிப்பு வினைச்சொல்லானது ஏதோ நிபந்தனைக்குட்பட்டு நடைபெறக் கூடிய வினையையோ அல்லது விரும்பத்தக்க வினையையோ குறிக்கிறது. தவிரவும், யாதொரு இஷ்டத்தை வெளிப்படுத்தவும் அவற்றை உபயோகிக்கலாம். உதாரணம்: Е́сли бы вы зна́ли ру́сский язы́к, то всё по́няли бы «உங்களுக்கு ருஷ்ய மொழி தெரிந்திருந்தால் எல்லாம் புரிந்திருக்கும்». Я с удово́льствием изуча́л бы ру́сский язы́к «நான் மகிழ்ச்சியுடன் ருஷ்ய மொழியைப் படித்திருப்பேன்». Попро́бовали бы вы изучи́ть ру́сский язы́к «நீங்கள் ருஷ்ய மொழியைக் கற்றுக் கொள்ள முயற்சித்தால் நல்லது».

48. ருஷ்ய மொழியிலே பல வினைச்சொற்களுக்கு -ся என்னும் இடைச்சொல் ஏன்று எல்லா உருவங்களிலும் சேர்க்கப்பட்டு வருகிறது. உதாரணம்: одева́ть «உடுத்தல்» — одева́ться «உடுத்துக்கொள்ளுதல்», одева́ю «நான் ஆடை உடுத்து விடுகிறேன்» — одева́юсь «நான் உடுத்துக்கொள்கிறேன்». -ся என்பதைச் சேர்ப்பதினால் பிறவினை தன்வினையாகவும், செய்வினை செயப்பாட்டுவினையாகவும், செயப்படுபொருள் குன்று வினை

செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் மாறி விடுகிறது உதாரணமாக;

பிறவினை சில -ся என்பதைக் கொள்வதினால் தன்வினையாக மாறுகின்றன: одева́ть «ஆடை உடுத்தல்» — одева́ться «உடுத்துக் கொள்ளுதல்» (அதாவது «தனக்கு உடுத்தல்»), умыва́ть «கழுவுதல்» — умыва́ться «கழுவிக்கொள்ளுதல்» (அதாவது «தன்னைக் கழுவுதல்»);

பிறவினை சில -ся என்பதைக் கொள்வதினால் பரஸ்பர வினையைக் குறிப்பவையாக மாறுகின்றன: ссо́рить «சச்சரவிடுதல்»— ссо́риться «சச்சரவிட்டுக் கொள்ளுதல்», встре́тить «சந்தித்தல்» — встре́титься «சந்தித்துக்கொள்ளுதல்».

செயப்படுபொருள் குன்று வினை பல -ся என்பதைக் கொள்வதினால் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் செயப்பாட்டு வினையாகவும் மாறுகின்றன: стро́ить «கட்டியமைத்தல்» — стро́иться «கட்டியமைக்கப்படுதல்», управля́ть «ஆளுதல்» — управля́ться «ஆளப்படுதல்».

சில சந்தர்ப்பங்களில் -ся என்பதைக் கொள்வதினால் வினைச்சொற்களுக்குள்ள பொருள் ,மாறி விடுகிறது: находи́ть «கண்டுபிடித்தல்» — находи́ться «இருத்தல்», доби́ть «அடித்துக் கொன்றுமுடித்தல்» — доби́ться «தன் முயற்சிகளினால் அடைந்து விடுதல்»;

கடைசியாக, வினைச்சொற்கள் பல -ся என்பது இன்றி முற்றிலும் பயன்படுவதில்லை: наде́яться «நம்புதல்»,боя́ться «அஞ்சுதல்», горди́ться «பெருமைப்படுதல்», смея́ться «சிரித்தல்».

-ся என்பதைக் கொண்ட வினைச்சொற்கள் எல்லாம் மற்ற வினைச்சொற்களைப் போல ரூபகரணம் செய்து வருகின்றன. ஆனால் அவை ஓவ்வோர் உருவத்திற்கும் பின்னே -ся (அல்லது -сь) என்பதைச் சேர்த்துக்கொள்கின்றன. உதாரணமாக, смея́ться «சிரித்தல்» ரூபகரணம் செய்வது பின்வருமாறு:

நிகழ்காலம்

я смею́сь	«நான் சிரிக்கிறேன்»
ты смеёшься	«நீ சிரிக்கிறாய்»
он (она́, оно́) смеётся	«அவன் (அவள், அது) சிரிக்கிறான் (சிரிக்கிறாள், சிரிக்கிறது)»
мы смеёмся	«நாம் சிரிக்கிறோம்»
вы смеётесь	«நீங்கள் சிரிக்கிறீர்கள்»
они́ смею́тся	«அவர்கள் சிரிக்கிறார்கள், அவை சிரிக்கின்றன»

எதிர்காலம்

я бу́ду смея́ться	«நான் சிரிப்பேன்»
ты бу́дешь смея́ться	«நீ சிரிப்பாய்»
он (она́, оно́) бу́дет смея́ться	«அவன் (அவள், அது) சிரிப்பான் (சிரிப்பாள், சிரிக்கும்)»
мы бу́дем смея́ться	«நாம் சிரிப்போம்»
вы бу́дете смея́ться	«நீங்கள் சிரிப்பீர்கள்»
они́ бу́дут смея́ться	«அவர்கள் சிரிப்பார்கள், அவை சிரிக்கும்»

இறந்தகாலம்

я (ты, он) смея́лся	«நான் (நீ, அவன்) சிரித்தேன் (சிரித்தாய், சிரித்தான்)»
я (ты, она́) смея́лась	«நான் (நீ, அவள்) சிரித்தேன் (சிரித்தாய், சிரித்தாள்)»
оно́ смея́лось	«அது சிரித்தது»
мы (вы, они́) смея́лись	«நாம் (நீங்கள், அவர்கள், அவை) சிரித்தோம் (சிரித்தீர்கள், சிரித்தன)»

பெயரெச்சம்

49. ருஷ்ய வினைச்சொற்களுக்கு நிகழ்காலப் பெயரெச்சமும் இறந்தகாலப் பெயரெச்சமும் இருக்கின்றன. தவிரவும், செய்வினைப் பெயரெச்சமும் செயப்பாட்டுவினைப் பெயரெச்சமும் வேறுபடுகின்றன. செய்வினைப் பெயரெச்சங்களை எல்லா வினைச்சொற்களிலிருந்தும் அமைக்கலாம்; செயப்பாட்டுவினைப் பெயரெச்சங்களையோ செயப்படுபொருள் குன்று வினைச்சொற்களிலிருந்து மட்டும் தான் அமைக்கலாம். இவ்வாறுக, செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்களுக்கு இரண்டு பெயரெச்சங்கள் — அதாவது செய்வினை நிகழ்காலப் பெயரெச்சமும் செய்வினை இறந்தகாலப் பெயரெச்சமும் — மட்டும் தான் இருக்கின்றன. செயப்படுபொருள் குன்று வினைச்சொற்களுக்கோ நான்கு பெயரெச்சங்கள் — அதாவது செய்வினை நிகழ்காலப் பெயரெச்சமும், செயப்பாட்டுவினை நிகழ்காலப் பெயரெச்சமும், செய்வினை இறந்தகாலப் பெயரெச்சமும், செயப்பாட்டுவினை இறந்தகாலப் பெயரெச்சமும் — இருக்கின்றன.

செய்வினை நிகழ்காலப் பெயரெச்சங்களை அமைப்பதற்கு நிகழ்கால வினைமுற்றுக்களில் இடத்தைக் குறிக்கும் விகுதியைப்

போக்கி **-ущий, -ющий** அல்லது **-ащий, -ящий** ஆகிய விகுதிகளில் ஒன்றைச் சேர்த்துவிட வேண்டும். முதலாவது ரூபகரண வினைச் சொற்களுக்கு **-ущий, -ющий** என்பன உரியவை; இரண்டாவது ரூபகரண வினைச்சொற்களுக்கு **-ащий, -ящий** என்பன உரியவை. உதாரணம்: пишу́ «நான் எழுதுகிறேன்» — пи́шущий «எழுதுகிற», чита́ю «நான் படிக்கிறேன்» — чита́ющий «படிக்கிற», кричу́ «நான் கூச்சலிடுகிறேன்» — крича́щий «கூச்சலிடுகிற», стро́ю «நான் கட்டியமைக்கிறேன்» — стро́ящий «கட்டியமைக்கிற».

செய்வினை இறந்தகாலப் பெயரெச்சங்களை அமைப்பதற்கு இறந்தகால வினைமுற்று விகுதியாகிய **-л** என்பதைப் போக்கி **-вший** என்னும் விகுதியைச் சேர்த்து விட வேண்டும். உதாரணம்: я писа́л «நான் எழுதினேன்» — писа́вший «எழுதின», ты чита́л «நீ படித்தாய்» — чита́вший «படித்த», он крича́л «அவன் கூச்சலிட்டான்» — крича́вший «கூச்சலிட்ட», я стро́ил «நான் கட்டியமைத்து வந்தேன்» — стро́ивший «கட்டியமைத்த». ஆண்பால் உருவங்களில் **-л** வராத வினை முற்றுக்கள் **-ший** என்பதைக் கொண்டு பெயரெச்சங்களை அமைத்து விடுகின்றன. உதாரணம்: он нёс «அவன் சுமந்து கொண்டு வந்தான்» — нёсший «சுமந்து கொண்டு வந்த». இவற்றைத் தவிரவும், நிகழ்கால வினையெச்ச உருவத்தில் **-сти** என்பதைக் கொண்ட வினைச்சொற்களில் சில நிகழ்கால (எதிர்கால) வினைமுற்று விகுதியைப் போக்கி **-ший** என்பதைச் சேர்த்துக்கொண்டு இந்தப் பெயரெச்சத்தை அமைக்கின்றன. இப்படிப்பட்ட வினைச்சொற்களில் நிகழ்கால (எதிர்கால) வினைமுற்றுக்களுக்கு முன்னால் **-д-** அல்லது **-т-** என்பவை தோன்றும். உதாரணம்: вести́ «நடத்துதல்» — я веду́ «நான் நடத்துகிறேன்» — ве́дший «நடத்தின», расцвести́ «மலர்ந்து விடுதல்» — ты расцветёшь «நீ மலர்ந்து விடுவாய்» — расцве́тший «மலர்ந்துவிட்ட».

செயப்பாட்டுவினை நிகழ்காலப் பெயரெச்சங்களை அமைப்பதற்கு நிகழ்கால வினைமுற்று விகுதிகளைப் போக்கி **-емый** அல்லது **-имый** என்னும் விகுதிகளில் ஒன்றைச் சேர்த்துவிட வேண்டும். முதலாவது ரூபகரண வினைச்சொற்களுக்கு -емый என்பது உரியதாகும்; இரண்டாவது ரூபகரண வினைச்சொற்களுக்கு -имый என்பது உரியதாகும். உதாரணம்: я чита́ю «நான் படிக்கிறேன்» — чита́емый «படிக்கப்படுகிற», мы ви́дим «நாம் காண்கிறோம்» — ви́димый «காணப்படுகிற».

செயப்பாட்டுவினை இறந்தகாலப் பெயரெச்சங்களை அமைப்பதற்கு இறந்தகால வினைமுற்று விகுதியாகிய -л என்பதைப் போக்கி **-нный** அல்லது **-енный** ஆகிய விகுதிகளில் ஒன்றைச் சேர்த்துவிட வேண்டும். **и**-கரம் அன்றி எல்லா உயிரெழுத்துக்களுக்குப் பின்னும் -нный என்பது சேர்க்கப்படும்;

மெய்யெழுத்துக்களுக்குப் பின் -енный என்பது சேர்க்கப்படும். விகுதிக்கு முன்னே и- கரம் வந்தால் இவ் и-கரம் கெட்டு -енный என்பது சேர்க்கப்படும். உதாரணம்: я читáл «நான் படித்தேன்» — чúтанный «படிக்கப்பட்ட», ты принёс «நீ கொண்டுவந்தாய்» — принесённый «கொண்டுவரப்பட்ட», он изучúл «அவன் கற்றுக்கொண்டான்» — изýченный «கற்றுக்கொள்ளப்பட்ட». சில சந்தர்ப்பங்களில் இந்தப் பெயரெச்சம் -тый என்னும் விகுதியைக் கொண்டு அமைக்கப்படுகிறது. உதாரணம்: он бил «அவன் அடித்தான்» — бúтый «அடிக்கப்பட்ட», он мыл «அவன் கழுவினான்» — мы́тый «கழுவப்பட்ட», я взял «நான் கொண்டேன்» — взя́тый «கொள்ளப்பட்ட», ты тёр «நீ தேய்த்தாய்» — тёртый «தேய்க்கப்பட்ட».

பெயரெச்சங்களுக்கு ஆண்பால், பெண்பால், நடுப்பால், பன்மையாகிய உருவங்கள் வேறுபடுகின்றன. அவை எல்லாம் பெயருரிச்சொற்களைப் போல வேற்றுமைப்பட்டு வருகின்றன.

50. மேற்கண்டவற்றைத் தவிர, செயப்பாட்டுவினைப் பெயரெச்சங்களுக்குத் தனிக் குறுக்கலான உருவங்கள் இருக்கின்றன. அவைகளின் விகுதிகள் ஆவன:

	நிகழ்காலம்		இறந்தகாலம்	
ஆண்பால்	-ем,	-им	-(е)н,	-т
பெண்பால்	-ема,	-има	-(е)на,	-та
நடுப்பால்	-емо,	-имо	-(е)но,	-то
பன்மை	-емы,	-имы	-(е)ны,	-ты

உதாரணம்: уважáть «மரியாதை செய்தல்» — ஆண். уважáем, பெண். уважáема, நடு. уважáемо, பன். уважáемы; любúть «அன்பு கூர்தல்» — ஆண். любúм, பெண். любúма, நடு. любúмо, பன். любúмы; изучúть «ஆராய்ந்து விடுதல்» — ஆண். изýчен, பெண். изýчена, நடு. изýчено, பன். изýчены; прочитáть «படித்து விடுதல்» — ஆண். прочúтан, பெண். прочúтана, நடு. прочúтано, பன். прочúтаны; мыть «கழுவுதல்» — ஆண். мыт, பெண். мы́та, நடு. мы́то, பன். мы́ты.

குறுக்கலான பெயரெச்சங்கள் குறுக்கலான பெயருரிச்சொற்களைப் போல வேற்றுமைப்படுவதில்லை.

வினையெச்சம்

51. இறந்தகால வினையெச்சங்கள் முற்றுப்பெறுத வினைகளையும் முற்றுப்பெற்ற வினைகளையும் குறிக்கின்றன.

முற்றுப்பெறுத வினையெச்சங்களை அமைப்பதற்கு நிகழ்கால வினைமுற்று விகுதியைப் போக்கி -я அல்லது (ж, ч, ш, щ ஆகிய எழுத்துக்களுக்குப் பின்) -а என்னும் விகுதிகளைச் சேர்த்துவிட வேண்டும். உதாரணம்: я читáю «நான் படிக்கிறேன்»— читáя «படித்து», ты дéлаешь «நீ செய்கிறாய்» — дéлая «செய்து», он живёт «அவன் வாழ்கிறான்» — живя́ «வாழ்ந்து», мы дышим «நாம் மூச்சு விடுகிறோம்» — дыша́ «மூச்சு விட்டு».

முற்றுப்பெற்ற வினையெச்சங்களை அமைப்பதற்கு இறந்தகால வினைமுற்று விகுதியைப் போக்கி -в(ши)என்னும் விகுதியைச் சேர்த்துவிட வேண்டும். உதாரணம்: я прочитáл «நான் படித்துவிட்டேன்» — прочитáв அல்லது прочитáвши «படித்துவிட்டு», ты сдéлал «நீ செய்து விட்டாய்» — сдéлав அல்லது сдéлавши «செய்துவிட்டு». இறந்தகால உருவங்களில் -л வராத வினைச்சொற்களின் வினையெச்சம் -ши என்பதைக் கொண்டு அமைக்கப்பட்டு வருகிறது. உதாரணம்: он вы́сох «அவன் உலர்ந்து போனான்» — вы́сохши «உலர்ந்துபோய்».

வினையுரிச்சொல்

52. ருஷ்ய மொழியிலே வினையுரிச்சொற்கள் எல்லாம் மாறுத சொற்களே யாகும். Здесь «இவ்விடத்தில்», там «அவ்விடத்தில்», сюдá «இவ்விடத்திற்கு», тудá «அவ்விடத்திற்கு», óчень «மிகவும்» போன்ற பகாப்பதங்களைத் தவிர, ருஷ்ய மொழியில் பெயருரிச்சொல், பெயர்ச்சொல், பிரதிப்பெயர்ச்சொல், எண்பெயர்ச்சொல் முதலிய சொற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட வினையுரிச்சொற்கள் பலவும் இருக்கின்றன.

பெயருரிச்சொற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட வினையுரிச்சொற்களுக்குச் சாதாரணமாக -о, -е, -и முதலிய உயிரெழுத்து இறுதிகள் உண்டு. உதாரணம்: хорошó «நன்றாய்», и́скренне «மனமார», по-рýсски «ருஷ்ய மொழியில்».

பெயர்ச்சொல், பிரதிப்பெயர்ச்சொல், எண்பெயர்ச்சொற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட வினையுரிச்சொற்கள் எல்லாம் சாதாரணமாக அந்தந்தச் சொற்களின் வேற்றுமை உருவங்கள் ஆகும். உதாரணம்:ýтром «காலையில்», днём «பட்டப்பகலில்», вдали́ «தூரத்தில்», по-мóему «என் கருத்தின்

படி», во-пе́рвых «முதலாவதாக», во-вторы́х «இரண்டாவதாக», вдвоём «இருவருமாக», втро́е «மும்மடங்கு».

வாக்கியத்தில் வினையுரிச்சொல் சாதாரணமாக வினை நடந்துபோகும் முறையைக் காட்டுகிறது.

முன்னிடைச்சொல்

53. ருஷ்ய மொழியிலே இரு சொற்களுக்கு உள்ளதொடர்புகளை வெளிப்படுத்தும் விசேஷமான சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. வாக்கியத்தில் வேறு சொற்களுக்கு முன்னல் வருவதினால் அவை முன்னிடைச்சொற்கள் (prepositions) எனப்படுகின்றன. எழுவாய் வேற்றுமையில் வருபவை ஒழிய, மற்ற வேற்றுமைகளில் வரும் சொற்களுக்கு முன்னல் முன்னிடைச்சொல் வரலாம். முன்னிடைவேற்றுமை உருவங்களுக்கு முன்னே கட்டாயமாக முன்னிடைச்சொல் பயன்படுத்தப் படவேண்டும்.

ஒவ்வொரு முன்னிடைச்சொல்லும் தனக்குரிய வேற்றுமை உருவங்களுக்கு முன்னல் தானே பயன்படலாம். முன்னிடைச்சொற்களில் சில ஒரே ஒரு வேற்றுமையோடு மட்டும் வரலாம்; வேறு சில இரண்டு அல்லது மூன்று வேற்றுமைகளோடு வரலாம். ஒவ்வொரு முன்னிடைச்சொல்லும் எந்தெந்த வேற்றுமைகளோடு வருகிறதென்பதும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்குப் பொருள் என்ன என்பதும் ஞாபகப்படுத்திக்கொள்ளத் தக்கவை.

வேற்றுமைகளும் முக்கியமான முன்னிடைச்சொற்களும்

உரிமைவேற்றுமை

(1) без «இன்றி»
близ «அருகே»
вдоль «நெடுக»
вме́сто «பதிலாக»
вне «புறம்பாக»
внутри́ «உள்ளே»
во́зле «அருகே»
вокру́г «சுற்றிலும்»
для «வேண்டி»
до «முன்பே», «வரையில்»
из «உள்ளிருந்து»
и́з-за «காரணத்தினால்»
из-по́д «கீழிருந்து»
кро́ме «தவிர»
ми́мо «பக்கமாக», «மிஞ்சி»
накану́не «முன்னாளில்»
о́коло «அருகே»
от «இடமிருந்து», «காரணத்தினால்»
по́сле «பிறகு»
посреди́ «இடையே»
про́тив «எதிராக»
ра́ди «வேண்டி»
среди́ «இடையே»
у «இடத்தில்»

(2) мéжду, меж «இடையே» (கருவிவேற்றுமையையும் பார்க்க)

(3) с, со «மேல் இருந்து», «இட மிருந்து», «விட்டு», «காரணத் திணல்» (செயப்படுபொருள் வேற்று மையையும் கருவிவேற்று மையையும் பார்க்க)

சம்பிரதானவேற்றுமை

(1) блaгодaря́ «என்பதினல்»
вопрекú «பொருட்படுத்தா மல்»
к «நோக்கி», «பேரில்»
подóбно «போல»
согла́сно «இணங்கி»
наперекóр «எதிர்த்து»
навстре́чу «எதிர்கொள்ள»

(2) по «வழியாக», «படி» (கரு விவேற்றுமையையும் முன்னி டை வேற்றுமையையும் பார் க்க)

செயப்படுபொருள் வேற்றுமை

(1) про «பற்றி», «குறித்து»
сквозь «வழியாக», «ஊடுருவி»
чéрез «வழியாக», «ஊடுருவி», «தாண்டி»

(2) в «உள்ளே»
на «மேல்»
о, об «எதிர்த்து», «மேல்» (முன்னிடை வேற்றுமையை யும் பார்க்க)

(3) за «பின்னல்», «மறைவில்»
под «கீழே» (கருவிவேற்றுமை யையும் பார்க்க)

(4) с, со «போல» (உரிமைவேற் றுமையையும் கருவிவேற்று மையையும் பார்க்க)

(5) по «அளவில்» (சம்பிரதான வேற்றுமையையும் முன்னி டை வேற்றுமையையும் பார்க்க)

கருவிவேற்றுமை

(1)над «மேலே»
пéред «முன்னலே»

(2)за «பின்னல்», «மறைவில்»
под «கீழே» (செயப்படுபொ ருள் வேற்றுமையையும் பார்க்க)

(3)мéжду, меж «இடையே» (உரிமைவேற்றுமையையும் பார்க்க)

(4)с «உடன்» (உரிமைவேற்று மையையும் செயப்படுபொ ருள் வேற்றுமையையும் பார்க்க)

முன்னிடைவேற்றுமை

(1)при «இடத்தில்»
(2)в «உள்ளே»
на «மேலே»
о, об «பற்றி», «குறித்து» (கருவிவேற்றுமையையும் பார்க்க)
3) по «கூட்டாக» (சம்பிரதான வேற்றுமையையும் பார்க்க)

முன்னிடைச்சொற்கள் வாக்கியங்களிலே பயன்படும் எடுத்துக்காட்டுகளை அகராதியில் பார்க்கவும்.

புணரிடைச்சொல்

54. ருஷ்ய மொழியில் சொற்களையும் வாக்கியங்களையும் இணைக்கும்படியான விசேஷச் சொற்கள் இருக்கின்றன. அவை புணரிடைச்சொற்கள் (conjunctions) எனப்படும்.

புணரிடைச்சொற்கள் வெளிப்படுத்தும் இணைப்பு விதங்கள் வெவ்வேறுக இருப்பதனால் சொற்களையும் வாக்கியங்களையும் சமமாக்கி இணைக்கும் புணரிடைச்சொற்களும் (coordinating conjunctions) அவைகளை ஒன்றுக்கொன்று கீழ்ப்படுத்தி இணைக்கும் புணரிடைச்சொற்களும் (subordinating conjunctions) வேறுபடுகின்றன.

சமமாக்கி இணைப்பவை (и, да «உம்», а, но, да, однáко, же, зато́ «ஆனால்», «ஓ», и́ли, ли́бо, то... то, ни... ни «ஆவது», «ஓ» முதலியன) இரண்டு மூன்று சமமட்டச் சொற்களையோ வாக்கியங்களையோ இணைக்கின்றன. உதாரணம்: Рáдостно бы́ло и на нéбе, и на земле́, и в сéрдце человéка. «வானத்திலும் நிலத்திலும் மனித இதயத்திலும் ஒரே மகிழ்ச்சியாக இருந்தது». Я не получи́л ни пи́сем, ни газе́т. «எனக்குக் கடிதங்களோ பத்திரிகைகளோ கிடைக்கவேயில்லை». Со́лнце зашло́ за го́ру, но бы́ло ещё светло́. «சூரியன் மலைக்குப்பின் இறங்கி மறைந்தபோதிலும் இன்னும் வெளிச்சமாக இருந்தது».

கீழ்ப்படுத்தி இணைப்பவை கூட்டுவாக்கியங்களின் பகுதிகளை இணைப்பவையாகும். கூட்டுவாக்கியத்தின் இரு பகுதிகளுக்குள்ள சம்பந்தத்தின்படி இப்புணரிடைச்சொற்கள் காரணம் (так как, потому́ что, и́бо «காரணத்தினால்»), நோக்கம் (что́бы, для того́ что́бы «நோக்கத்துடன்»), விளைவு (так что «விளைவாக»), நிபந்தனை (е́сли, е́сли бы, раз, ли «ஆனால்»), சலுகை (хотя́, хотя́ бы, несмотря́ на то что «போதிலும்»), உபமானம் (как, бу́дто, как бу́дто, сло́вно «போல»), காலம் (едва́, как, как то́лько, лишь «உடனே»), பொருள் (что, что́бы, бу́дто бы, как

«என்று», «என்பதாக») போன்றவற்றை வெளிப்படுத்துக்கின்றன. உதாரணம்: Скажи́ ему́, что я приду́ за́втра. «நான் நாளை வருவேன் என்று அவனிடம் சொல்லு». Скажи́ ему́, что́бы он пришёл за́втра. «அவனை நாளை வரும்படி சொல்லு». Е́сли я получу́ о́тпуск, то пое́ду к мо́рю. «விடுமுறை கிடைத்தால் (கிடைக்கும் ஆனால்) நான் கடற்கரைக்குப் போவேன்». Раз дал сло́во, до́лжен его́ сдержа́ть. «சொல் கொடுத்துவிட்ட படியால் அதைக் காப்பாற்ற வேண்டும்». Едва́ мы добра́лись до ле́са, как пошёл дождь. «நாங்கள் காட்டை அடைந்ததும் அடையாததுமாக மழை பெய்ய ஆரம்பித்தது».

இடைச்சொல்

55. ருஷ்ய மொழியிலுள்ள இடைச்சொற்களில் (particles) முக்கியமானவை பின்வருமாறு:

அ. சம்மதத்தை வெளிப்படுத்தும் இடைச்சொற்கள்: да «ஆம்», «ஆமாம்», так «சரி»;

ஆ. எதிர்மறை இடைச்சொற்கள்: нет «இல்லை», не «அல்ல», ни «உம் (இல்லை)»; உதாரணம்: Э́то де́рево? — Нет, э́то не де́рево. Здесь нет ни де́рева, ни куста́. «இது மரமா? — இல்லை, இது மரம் அல்ல. இங்கே மரமும் இல்லை, செடியும் இல்லை.»;

இ. கேள்வி இடைச்சொற்கள்: ли, ль «ஆ», ра́зве, неуже́ли, да «ஓ»; உதாரணம்: Зна́ете ли вы э́то? «இது உங்களுக்குத் தெரியுமா?»; Да ра́зве он придёт? «அவன் வருவானே?»;

ஈ. சுட்டும் இடைச்சொற்கள்: вот «இதோ», вон «அதோ»;

உ. வற்புறுத்தும் இடைச்சொற்கள்: да́же «உம்», «கூட», же «ஏ», и «உம்»; உதாரணம்: да́же он «அவனும் கூட»;

ஊ. சமுசயத்தை வெளிப்படுத்தும் இடைச்சொற்கள்: -то, -либо, -нибудь, кое- «ஓ», «ஆவது»; உதாரணம்: кто «யார்» — кто́-либо «யாராவது», где «எங்கே» — где́-то «எங்கேயோ», как «எப்படி» — кое-ка́к «எப்படியாயினும்».

வேறு உதாரணங்களை அகராதியில் பார்க்கவும்.

வியப்பிடைச்சொல்

56. தமிழ் மொழியைப் போலவே, ருஷ்ய மொழியிலே வியப்பிடைச்சொற்கள் (interjections) பல பயன்பட்டு வருகின்றன. அவைகளில் முக்கியமானவை:

а «ஓகோ», ох, ах «ஐயோ», фу, фи «சீ», «சேச்சே», эй «அடா», «அடி», ага́ «ஆஹா», ха-ха-ха́ «ஆஹா-ஹா», ура́ «ஜயஜய», «வெல்க».

பாடப்புத்தகங்கள்

N. Potapova, Learning Russian, Moscow, s. a.
N. Potapova, Russian: elementary course, Books 1-2, Moscow, 1960-61.
I. M. Pulkina, A short Russian reference grammar, Moscow, 1960.
Russian-English Dictionary. Edited by A. Smirnitsky, Moscow, 1958.
Грамматика русского языка, тт. 1-2, Москва, 1952-54.
Словарь русского языка, тт. 1-4, Москва, 1957-61.

Михаил Сергеевич Андронов, Алев Шакирович Ибрагимов, Нина Николаевна Юганова.

РУССКО-ТАМИЛЬСКИЙ СЛОВАРЬ. Около 24 000 слов. Под редакцией П. Сомасундарама. С приложением краткого очерка грамматики русского языка, составленного М. С. Андроновым. М., Издательство „Советская Энциклопедия", 1965.
1176 стр.

Редактор *Э. И. Кравцова*
Технический редактор *Э. С. Соболевская*
Корректоры: *А. Т. Кобзарь, Л. В. Николаева*

Сдано в набор 13/XI 1963 г. Подписано к печати 14/I 1965г. Формат 84×108/32. Печатных листов 36,75(60,3). Учетно-изд. листов 67,2.
Тираж 2 500 экз. Зак. 2660.
Цена словаря в переплете 2 р. 84 к.

Издательство „Советская Энциклопедия"
Москва, Ж—28, Покровский бульвар, 8.

Московская типография №7 „Искра Революции" "Главполиграфпрома" Государственного комитета Совета Министров СССР по печати
Москва, Г-19, пер. Аксакова, 13.

ЗАМЕЧЕННЫЕ ОПЕЧАТКИ

Страница	Столбец	Строка	Напечатано	Следует читать
83	правый	21 сверху	**~ться**	**~тся**
266	левый	4 ”	**нехвата́ет**	**не хвата́ет**
288	”	5 ”	*கமத்து*	*சுமத்து*
307	”	16 снизу	**законона́тельный**	**законода́тельный**
344	правый	3 ”	*நட்சத்திம்ர*	*நட்சத்திரம்*
365	левый	8 ”	*நடெநாளாகவே*	*நெடுநாளாகவே*
714	правый	17 ”	*சோம்பியன்ஷிப்*	*சேம்பியன்ஷிப்*
771	”	19 сверху	*நிஸ*	*நிஜ*
847	левый	1 снизу	котролйровать	контролйровать
1015	правый	8 сверху	*இயங்கத்*	*இயக்கத்*
1022	”	20 ”	*புற்ப்பறுள்ள*	*புப்பற்றுள்ள*
1124	третий	10 снизу	*(இங்கிலிஷ் d)*	*(இங்கிலிஷ் b)*